Government of Western Australia
Mental Health Commission

## பின்வருவனவற்றிற்கு உங்களுக்கு உரிமையுண்டு:

- உங்கள் உரிமைகள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கும், உங்கள் கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்படவும்
- நீங்கள் விரும்பியவரை நியமிக்கவும் (நீங்கள் தேர்ந்தெடுப்பவர்கள் பிரசுரத்தைப் பார்க்கவும்)
- உங்களது சிகிச்சை, ஆதரவு, வெளியேறும் திட்டத்தில் பங்குபெறல்
- தங்களுக்குரியதும் அந்தரங்கமானதும்
- உங்கள் மருத்துவ அறிக்கையைப் பார்வையிடல் (இந்த உரிமை மட்டுப்படுத்தப்படலாம்)
- இன்னொரு மனநோய் மருத்துவரின் மேலதிக கருத்து - இதனை ஒழுங்குசெய்ய உங்கள் மன நோய் மருத்துவரை அல்லது பிரதம மன நோய் மருத்துவரை நீங்கள் கேட்கலாம் (தொ: 08 9222 4462)
- உள நல ஆதரவு சேவையைப் பெறலாம் (Mental Health Advocacy Service) (தொ:1800 999 057). நீங்கள் கட்டாய நோயாளராக வந்ததும், ஓர் உளநல ஆதரவாளர் 7 நாட்களுக்குள் தானாக உங்களுடன் தொடர்பு கொள்வார்
- உளநல சேவை அல்லது சுகாதார மற்றும் இயலாமை சேவைகள் முறைப்பாடுகள் காரியாலயத்திற்கு ஒரு புகார் செய்தல் (HaDSCO) (தொ:1800813583)
- உளநல தீர்ப்பாயத்தால் உங்கள் விடயத்தை மீளாய்வு செய்வித்தல் (தொ:0861453900). நீங்கள் கட்டாய நோயாளராக வந்து 5 வாரங்களுக்குள் (குழந்தைகளுக்குப் 10 நாட்கள்) உங்கள் விடயத்தை விசாரிக்க தீர்ப்பாயம் பட்டியலிடும்

## மேலும் தகவல்கள்

இந்தப் பிரசுரத்திலுள்ள தகவல்கள், உளநலச் சட்டம் 2014 இல் விபரிக்கப்பட்ட சட்டங்களுடன் தொடர்புடையதாகும்.

- பரிசோதனை ஒன்றிற்காக மனநோய் வைத்தியருக்குச் சிபாரிசு செய்தல்
- தங்கிச் சிகிச்சைபெறும் நோயாளருக்கான வழிமுறைகள்.
- சமூகச் சிகிச்சை வழிமுறைகள்
- தானாக விரும்பி வரும் நோயாளருக்கான தகவல்கள்
- மன வருத்தத்திற்கான மருத்துவத்தைப் பெறுதல்
- தனிப்பட்ட உதவியாளர்களுக்கான தகவல்கள்
- நியமிக்கப்பட்டவர்கள்: நியமனம் செய்வது எவ்வாறு அத்துடன் அதன் அர்த்தம் என்ன.

## ஏனைய பிரசுரங்கள் கிடைக்குமிடம்:

- உள நல நியாய மன்று
- உள நல ஆதரவு சேவை
- உள நல சட்ட நிலையம்

உள நல சட்டம் 2014 பற்றி அதிக தகவல்களுக்கும், ஏனைய வழி வகைகளுக்கும் வருகை தரவும், மன நல ஆணைய இணையத்தளம்: www.wa.gov.au or phone (08) 62721200

This document can be made available in other languages and alternative formats on request.

Published by the Mental Health Commission (2015)

# சமூக சிகிச்சை விதிமுறைகள்



**ஒரு சமூக சிகிச்சை விதிமுறை (படிவம் 5 ஏ) என்பது உள நலச் சட்டம் 2014 இன் கீழ் நீங்கள் சமூகத்தில் கட்டாய நோயாளராகச் சிகிச்சைபெறுவதற்கான விதிமுறையாகும்.**

**நீங்கள் ஒரு சமூக சிகிச்சை விதிமுறையில் இருப்பின் உங்களது உரிமைகள் என்ன அத்துடன் நீங்கள் எதனை எதிர்பார்க்கலாம் என்பது பற்றிய தகவல்களைத் தங்களுக்கு இந்தப் பிரசுரம் வழங்குகிறது.**

## சமூகச் சிகிச்சை விதிமுறை ஏன் உருவாக்கப்பட்டது?

இது ஏனென்றால், நீங்கள் ஒரு சமூகச் சிகிச்சை விதிமுறையில் (படிவம் 5 ஏ), பின்வருவன பற்றி ஒரு மனநோய் மருத்துவர் சோதனை செய்து முடிவெடுப்பார்:

- சிகிச்சை தேவைப்படும் ஒரு மன வருத்தம் உங்களுக்கு இருக்கிறது
- நீங்கள் சிகிச்சை பெறாவிட்டால், உங்களுக்கோ அல்லது இன்னொருவருக்கோ குறிப்பிடக்கூடிய அபாயம் இருக்கிறது.
- சிகிச்சை பற்றி முடிவெடுக்கக்கூடியளவு நல்ல போதிய நிலையில் நீங்கள் இல்லை.
- சிகிச்சை பெறுவதற்காக நீங்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவேண்டியதில்லை.
- ஒரு சமூக சிகிச்சை விதிமுறையை விடவும் உங்களுக்குச் சிகிச்சையளிக்க ஒரு குறைந்த மட்டுப்பாடுகளுடனான வேறு வழி இல்லை.

## சமூக சிகிச்சை விதிமுறையால் தாங்கள் விளங்குவது என்ன?

ஒரு சமூக சிகிச்சை விதிமுறை என்பதன் அர்த்தம் நீங்கள் தொடர்ந்தும் சமுதாயத்தில் வாழலாம்(உதாரணமாக வீட்டில் அல்லது ஒரு விடுதியில்), எவ்வாறாயினும் நீங்கள் ஒரு கட்டாய நோயாளர் என்பதுடன் உங்களுக்காகத் திட்டமிடப்பட்ட சிகிச்சையை ஏற்றாக வேண்டும்.

ஆகக் குறைந்தது மாதத்தில் ஒருமுறையாவது உங்களை மேற்பார்வை செய்யும் மனநோய் மருத்துவரால் அல்லது இன்னொரு வைத்தியரால் நீங்கள் பரிசோதிக்கப்படுவீர்கள்; நீங்கள் இதற்குக் கட்டாயம் சமூகமளிக்கவேண்டும். உங்களை மேற்பார்வைசெய்யும் மனநோய் மருத்துவரால் வகுக்கப்படும் வழிமுறைகள் எல்லாவற்றையும் நீங்கள் கட்டாயம் பின்பற்றவேண்டும். உங்களது சமூகச் சிகிச்சை விதிமுறையின் நிபந்தனைகளில் இவை விபரிக்கப்பட்டுள்ளன.

## இந்த விதிமுறைக்கு நீங்கள் இணங்காவிடின் என்னவாகும்?

நீங்கள் உங்களது விதிமுறைக்கு இணங்காது விட்டால், (உதாரணமாக முன்பதிவுகளுக்குச் சமூகமளிக்காதுவிடல் அல்லது உங்கள் சிகிச்சைத் திட்டத்தினைப் பின்பற்றாது விடல்), அத்துடன் உங்களை இணங்கவைக்க சகல நியாயமான நடவடிக்கைகளையும் உங்கள் மனநோய் மருத்துவர் எடுத்திருந்தால், அந்த நிலையில் நீங்கள் சமூக சிகிச்சை விதிமுறையை மீறியவராவீர்கள்.

நீங்கள் உடன்படவில்லையெனவும், அத்துடன் உடன்படுவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டுமெனக் கூறியும் 'அறிவிப்பு மீறல்' ஒன்றினை உங்கள் மன நோய் மருத்துவர் தருவார்.

இதற்குமேலும் நீங்கள் இணங்காதுவிட்டால் 'சமூகமளித்தலுக்கான உத்தரவு' ஒன்றினை உங்களுக்கு அனுப்புவார். அது நீங்கள் உங்கள் சிகிச்சைக்காகக் குறிப்பிட்ட ஓர் இடத்திற்கு, (மருந்தகம் அல்லது வைத்தியசாலை போன்றவை) குறிப்பிட்ட ஒரு நேரம் போவதற்கான ஓர் உத்தரவுப் பத்திரமாகும். இதற்கும் நீங்கள் இணங்காதுவிட்டால், ஒரு காவல் துறை அதிகாரி அல்லது போக்குவரத்து உத்தியோகத்தர் உங்களுக்குச் சிகிச்சையளிக்கப்படவுள்ள இடத்திற்கு உங்களைக் கூட்டிச் செல்வதற்காக அனுப்பிவைக்கப்படலாம்.

## ஒரு சமூக சிகிச்சைக்கான விதிமுறை எவ்வளவு காலம் நீடிக்கும்?

ஒரு சமூக சிகிச்சைக்கான விதிமுறை 3 மாதங்கள் வரை நீடிக்கும். இந்த விதிமுறையின் முடிவு திகதி 5ஏ படிவத்தில் எழுதப்படும்; அதன் பிரதி ஒன்றினை நீங்கள் பெறுவீர்கள்.

இந்த விதிமுறையின் கடைசி வாரத்தில், இந்த விதிமுறை நீடிக்கப்பட வேண்டுமா என்பதனை உங்களது மேற்பார்வை மனநோய் மருத்துவர் தீர்மானிப்பார். மனநோய் மருத்துவர் இந்த விதிமுறையை **3 மாதங்கள்** வரை தொடரலாம். உங்களுக்குக் கட்டாய சிகிச்சை இனிமேலும் தேவைப்படாதவாறு போதிய நலம் பெறும்வரை தேவைக்கேற்ப பல தடவைகள் இந்த சமூகச் சிகிச்சை விதிமுறை ஒன்று நீடிக்கப்படலாம்.

உங்களது விதிமுறை நீடிக்கப்படுவதற்கு நீங்கள் சம்மதிக்காதுவிட்டால், இன்னொரு மனோவைத்தியரிடமிருந்து மேலும் ஆலோசனைக்காக ஏற்பாடு செய்யும்படி உங்கள் மனநோய் மருத்துவரை நீங்கள் கேட்கலாம். இந்த விதிமுறை நீடிக்கப்படவேண்டுமா, இல்லையா என்பதனைத் தீர்மானிப்பதற்காகப் 14 நாட்களுக்குள் இரண்டாவது மனநோய் மருத்துவர் உங்களைப் பார்வையிட வேண்டும். மேலும் கருத்தறிய நீங்கள் கேட்டும் அது கிடைக்காது விட்டால், இந்த விதிமுறை நீடிக்கப்பட முடியாது (முன்பதிவுக்கு நீங்கள் சமூகமளிக்காத காரணத்தால் மேற்கொண்டும் கருத்து வழங்கப்படாவிட்டால், அந்தச் சந்தர்ப்பத்தில் விதிமுறை நீடிக்கும்).

## எவ்வாறு சமூகச் சிகிச்சை விதிமுறை முடிவடையும்?

பின்வரும் சந்தர்ப்பங்களில் உங்களது சமூகச் சிகிச்சை விதிமுறை நீடிக்காது:

- காலாவதியானால் மற்றும் தொடராது விட்டால், அல்லது
- சமூகச் சிகிச்சை விதிமுறை இரத்துச் செய்யப்படுவதற்கான போதியளவு நலமாக நீங்கள் இருக்கிறீர்களென எந்த நேரத்திலாவது உங்கள் மனநோய் மருத்துவர் முடிவுசெய்தால், அல்லது
- நீங்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெறவேண்டுமென உங்களது மன நோய் மருத்துவர் உங்களைச் சோதித்துப்பார்த்து முடிவுசெய்து, நீங்கள் தங்கியிருந்து சிகிச்சைபெறக் கட்டளை பிறப்பித்தால், அல்லது
- நீங்கள் இனிமேலும் கட்டாய நோயாளராக இருக்க வேண்டியதில்லையென உங்கள் விடயத்தை உள நல தீர்ப்பாயம் மீளாய்வு செய்து முடிவெடுத்தால்.